## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 63/2020 | Date : 08.08.2024 | DW2 |
|---|---|---|
| Name: அப்துல் கபார் | S/o. முகமது இப்ராஉறிம் | |
| Evidence Recorded Time: 11.55 A.M. to 12. 10 P.M | | |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வாதியின் மூன்று சகோதரிகள் சேர்ந்து கண்ணாமூச்சி கிராமத்தில் உள்ள 5 ஏக்கர் நிலத்தை விற்று தரும்படி உங்களிடம் கேட்டார்களா என்றால் ஆம். 2018ம் வருடம் வாதி மற்றும் அவரது மனைவி உங்களிடம் வந்து தாவா சொத்தை தங்களுக்கு விற்கும்படி கேட்டார்கள் அதற்கு நீங்கள் வாதியின் மூன்று சகோதரிகளிடம் கலந்து ஆலோசித்துவிட்டு வாதிக்கு பதில் சொல்வதாக சொல்லிவிட்டு எந்த பதிலும் சொல்லாமல் இருந்துள்ளீர் என்றால் தவறு. வாதி மற்றும் அவரது மனைவி உங்களுக்கு நன்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு தாவா சொத்தை விற்றால் உங்களுக்கு கமிஷன் தொகை கிடைக்காது என்ற காரணத்தால் 1ஆம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளீர் என்றால் சரியல்ல வாதி தன்னுடைய அம்மா அவரின் மூன்று மகள்களுக்கும் உயில் எழுதி வைத்துள்ள சொத்தை விற்பனை செய்ய வேண்டாம் என்று சொன்னார் மேலும் மகள்களின் பெயர்களில் உள்ள சொத்தை விற்பனை செய்வதற்கு வாதிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும் சொன்னார் வாதியின் சகோதரிகள் நிலத்தை விற்று தரும்படி 2018ம் வருடம் என்னிடம் வந்து கேட்டார்கள். தாவா சொத்தை அளப்பதற்கு முறைப்படி கட்டணம் செலுத்தி சர்வேயரை அழைத்து அளந்தீர்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2018ம் வருடம் அளந்தார்கள் தேதி குறிப்பாக ஞாபகமில்லை. வாதி தன்னுடைய மூன்று சகோதரிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்கு ஒன்று தாக்கல் செய்து அது இந்த நீதிமன்றத்தில் OS 71/2019யின் கீழ் நிலுவையில் உள்ளது என்றால் தவறு. 1ஆம் பிரதிவாதியின் வயது குறிப்பாக எனக்கு தெரியாது. 1 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்தது ஒரு ரகசிய கிரயம் என்று சொன்னால் இல்லை. அந்த கிரயம் செய்யும் போது மாடிப்படி ஏற முடியாததால் நான் கீழே நின்றுவிட்டேன் ஆனால் அனைத்து

**தரப்பினர்களும் வந்திருந்தார்கள். பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இந்த வழ**ஒம்/–எஸ்.பிரியா**க்கில் நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்று சொன்னால் சரியல்ல.**

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

**ஒம்/–அப்துல்கபார்**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.பிரியா
சார்பு நீதிபதி, மேட்டுர்.